**சமஸ்த லங்கா சாசனாரக்சக சபை நிதியம் - 2018**

---

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

சமஸ்த லங்கா சாசனாரக்சக சபை நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று உரிமை தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் நான் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கவில்லை. நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, திரண்ட நிதியத்திலான மாற்றங்கள் தொடர்பான கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்றிற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சானறுகளை பெற்றுக்கொள்ள என்னால் முடியாதிருந்தது.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று

இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

---

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

---

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான “சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும். பொதுப் பேரேடு, குறிப்பேடு, குறிப்பேட்டு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு

அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) கணக்கு வைத்தல் தொடர்பில் போதியளவான உள்ளக கட்டுப்பாடொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | கருத்து முன்வைக்கப்பட்டிருக்கவி ல்லை | ஆரம்ப பயன்பாட்டு புத்தகங்கள், பயன்பாட்டு ஆவணங்கள் மற்றும் பேரேட்டுக் கணக்குகளை உரிய முறையில் பராமரித்துச் செல்லல் தொடர்பில் போதியளவான உள்ளக கட்டுப்பாடொன்று நடைமுறைப்புடுத்தப்பட வேண்டியமை. |
| (ஆ) பல்வேறு செயற்திட்டங்களின் கீழ் நன்கொடைகள் பெற்றுக் கொடுக்கும் போது கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள், நிறைவேற்றப்பட்ட விண்ணப்பங்கள், நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் போன்ற விடயங்கள் அடங்கிய ஆவணங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | போதியளவு தரவுகள் வெளிப்படுத்தப்படும் வகையில் ஆவணங்கள் பராமரிக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின்படி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு ஏற்றவாறு சொந்த வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான முறையான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளைப் பராமரித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். ஆனாலும் நிதியத்தினால் பேரேட்டுக் கணக்கு தயாரிக்கும் போது கொடுக்கல் வாங்கல் சம்பவம் நடைபெறும் சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படும் ஆவணங்களை அடிப்படையாகக் | காசேடு மற்றும் வங்கிக் கணக்கிணக்கக்கூற்று இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவதோடு நாள்தோறும் அல்லது மாதாந்தம் பிரதான பேரேட்டிற்கு மாற்றுவதற்கு போதியளவு கொடுக்கல் வாங்கல்கள் இல்லாத காரணத்தினால் பாவனைப் புத்தகத்தின் மீதியை ஒரே பதிவாக ஆண்டிறுதியில் பிரதான பேரேட்டிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மூலப் பதிவேடுகள், பயன்பாட்டு ஆவணம் மற்றும் பேரேட்டுக் கணக்கு என்பன உரிய முறையில் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொண்டு பேரேட்டுக் கணக்கு தயாரிப்பதற்கு பதிலாக, வருட இறுதியில் வங்கிக் கூற்று மற்றும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளை பயன்படுத்தி ஒவ்வொரு கணக்கிற்கும் அவ்வாண்டிற்குள் இடம்பெற்ற ஒரே மாதிரியான சகல கொடுக்கல் வாங்கல்களுக்கும் ஒரு பதிவு மட்டுமே பேரேட்டில் பதியப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டு அறநெறிப் பாடசாலை தினத்தை முன்னிட்டு அச்சிடப்பட்ட ரூபா 11,250,000 பெறுமதியான 1,050,000 கொடிகள் 323 சாசனாரக்ஷன அதிகாரசபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் கொடி விற்பனை வருமானமாக ரூபா 5,711,667 கணக்கிடப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 3,238,977 ஐ உறுதிப்படுத்திக்கொள்வதற்கான கொடி விற்பனை அறிக்கை முன்வைக்கப்படவில்லை. மேலும் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் விற்கப்படாது எஞ்சியிருந்த கொடிகளின் எண்ணிக்கை தொடர்பான அறிக்கை நிதியத்திடம் காணப்படாத காரணத்தினால் கணக்கிடப்பட்ட வருமானத்தின் சரியானதன்மை மற்றும் பூரணத்துவத்தை உறுதி செய்ய முடியவில்லை. | அறிக்கை பெற்றுக்கொள்வதற்காக முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்ட போதும் அந்த முறைமை ஆரம்பிக்கப்பட்ட முதல் வருடமாகையில் சகல தகவல்களும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. பின்னைய வருடங்களில இது வெற்றிகரமாக நடைபெறுமென எதிர்பார்க்கின்றேன். | நடைமுறையிலுள்ள முறையையின் கீழ் அறிக்கைகள் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையை ஒழுங்கமைத்தல், மேற்பார்வை அதிகார ஒருவரை நியமித்தல், மற்றும் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு எஞ்சியிருக்கும் கொடிகளுக்கான கணிப்பீட்டிற்கான முறைமையொன்றை அறிமுகப்படுத்தல் வேண்டும். |
| (இ) | தஹாம் சிசு சவிய புலமைப் பரிசில் வேலைத்திட்டத்தின் கீழ் புலமைப்பரிசில் வழங்குவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 1,256,900 செலவழிக்கப்பட்டிருந்த போதும் அதில் ரூபா 561,900 இற்கான கொடுப்பனவு புலமைப்பரிசில் பெருநருக்கு கிடைக்கப்பெற்றமை தொடர்பில் உறுதி செய்யும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சான்றுகள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | புலமைப்பரிசில் வழங்கி குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்குள் ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு அறநெறி பாடசாலை பிரதானிக்கு தெரிவிப்பதுடன் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் முறைமைப்படுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறுகள் ரூபா 3,514,220 எனும் மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறையானது ரூபா 317,489 ஆக இருந்தது. அதற்கமைவாக நிதி விளைவுகளில் ரூபா 3,831,709 ற்கான அதிகாரிப்பு அவதானிக்கப்பட்டது. கடந்த வருடத்தில் புது புன் மாபிய நம்பிக்கைப்பொறுப்பின் நன்கொடை மற்றும் கட்டட நன்கொடையாக ரூபா 2,300,000 செலவழிக்கப்பட்ட போதும், மீளாய்வாண்டில் இவ்வேலைத்திட்டங்கள் செய்யப்படாததும், கடந்ந வருடத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மருத்துவ நன்கொடை ரூபா 2,149,000 ஆக குறைவடைந்தும் இந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணமாகக் காணப்படுகின்றது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| விடயம் | 2018 | 2017 | வருமானம் (குறைவடைதல்)/அதிகரித்தல் செலவினம் (அதிகரித்தல்)/குறைவடைதல் | சதவீதமாக |
|---|---|---|---|---|
| வருமானம் | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | |
| கொடி வருமானம் | 5,712 | 5,442 | 270 | 5 |
| நிலையான வைப்பு வட்டி | 1,898 | 1705 | 193 | 11.3 |
| புது புன் மாபிய நம்பிக்கைப்பொறுப்பின் வட்டி | 157 | 667 | (510) | (76.5) |
| சேமிப்பு கணக்கு வட்டி | 507 | 568 | (61) | (10.7) |
| செலவு | | | | |
| சிசு சவிய புலமைப்பரிசில் நன்கொடை | 1,257 | 1,675 | 418 | 25 |
| வைத்திய நன்கொடை | 153 | 2,302 | 2,149 | (93.4) |
| இதய சத்திர சிகிச்சை நன்கொடை | 2,074 | 1,377 | (697) | (50.6) |
| புது புன் மாபிய நம்பிக்கைப்பொறுப்பு | - | 1,250 | 1,250 | 100 |
| சம்பளம் | 372 | 194 | (178) | (91.8) |
| பிடித்து வைக்கப்பட்ட வரி | 124 | 100 | (24) | (24) |
| கொடி அச்சிடல் செலவு | 812 | 672 | (140) | (20.8) |
| கட்டிட நன்கொடை | - | 1,050 | 1,050 | 100 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 அதிகாரங்கள், கொள்கைகள் மற்றும் பணிகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2014 ம் ஆண்டு 16 ம் இலக்க சமஸ்த லங்கா சாசனாரக்சக சபை (கூட்டிணைத்தல்) சட்டத்தின் தேவைகளை நிறைவேற்றாமை | | |
| (i) சட்டத்தின் 3ம் பந்தியில் (அ) தொடக்கம் (எ) வரை நிதியத்தின் பொதுக் குறிக்கோள் 9 வரை உள்ள போதும் அவற்றில் (உ) மற்றும் (ஊ) இன் குறிக்கப்பட்டுள்ள குறிக்கோள் 2 ஐ தவிர ஏனைய குறிக்கோள்கள் நிறைவேற்றப்படவில்லை. அத்துடன் மீளாய்வாண்டில் டிசம்பர் 31 ஆம் திகதி நிலையான வைப்பு மற்றும் நடைமுறைக் கணக்கில் ரூபா 37,441,929 ஆன மீதி காணப்பட்டாலும், பொதுக்குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக அந்த நிதி வினைத்திறனான முறையில் பிரயோகிப்பதற்கு நிதியம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | கொடி விற்பனை மூலம் பெற்றுக் கொண்ட பணத்தில் சிசு சவிய புலமைப் பரிசில் நன்கொடை, மருத்துவ உதவிகள், இருதய சத்திரச்சிகிச்சை நன்கொடை மற்றும் பௌத்த துறவி பெற்றோர் உதவி நன்கொடை போன்ற காரியங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. | நிதியத்தை நிறுவிய நோக்கை அடைவதற்கு நிலவுகின்ற சிக்கல்களை அடையாளம் கண்டு அச்சிக்கல்களை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) சட்டத்தின் 6 ஆம் பந்தியில் நிதியத்தின் பொது அதிகாரங்களின் கீழ் காணப்படும் (அ) மற்றும் (ஊ) உப பந்திகளின் படி நிதியத்தின் குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதற்காக தேவையான அதிகாரிகளையும் பணியாளர்களையும் நியமிப்பதற்கும் சேவையில் ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதற்காக தற்போது இரு உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | நிரந்தர பதவியணியை அங்கீகரித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பௌத்த விவகாரம் தொடர்பான திணைக்களத்தின் தரவுகளுக்கேற்ப மீளாய்வாண்டின் இறுதியில் நாட்டின் மொத்த அறநெறி பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை 2.19 மில்லியனை விஞ்சியுள்ளது. அறநெறி பாடசாலை தினத்தையொட்டி விற்பனை செய்வதற்காக மீளாய்வாண்டின் 1,050,000 கொடிகள் அச்சிடப்பட்டிருந்த போதும், கிடைக்கப்பெற்ற தரவுகளின் அடிப்படையில் அவற்றுள் அண்ணளவாக 230,603 கொடிகள் மட்டுமே விற்பனை செய்யப்பட்டிருந்தது. அதனடிப்படையில் அறநெறி பாடசாலை தினம் தொடர்பாக போதியளவு விழிப்புணர்வு வேலைத்திட்டம் நடாத்துவதற்கு நிதியத்தினால் நடவடிக்கை எடுக்கப்படாமை அவதானிக்கப்பட்டது. | 2019 ஆம் ஆண்டில் பிரசார வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | அறநெறி பாடசாலை தினம் மற்றும் கொடி விற்பனை வேலைத்திட்டம் தொடர்பாக போதியளவு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். |

## 3.3 நிதியங்களின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வணக்கத்திற்குரிய பௌத்த துறவிகளின் பெற்றோர்களுக்கு உதவி, புரியும் நோக்குடன் ''பௌத்த பிள்ளைகளின் பெற்றோர் நம்பிக்கைபொறுப்பு'' எனும் நிதியம் உருவாக்கப்பட்டிருந்த போதும் நிதியத்தினால் எதிர்பார்க்கப்பட்ட காரியங்கள் போதியளவு நிறைவேற்றப்படாமையால் மீளாய்வாண்டின் இறுதியில் அந்த நிதியத்தின் மீதி ரூபா 7,404,270 வரை அதிகரித்துக் காணப்பட்டது. | இந்த நம்பிக்கைபொறுப்பு நிதியத்திற்கு வருடத்திற்கு கிடைக்கப்பெறும் வட்டியில் அனைத்து குறிக்கோள்களையும் அவ்வாண்டிற்குள் நிறைவேற்றிக் கொள்வது கடினமாகும். | நிதியம் நிறுவப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக நிதியம் வினைத்திறனுடன் செயல்படுவது அவசியமாகும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 133 (ஆ) 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க மற்றும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்திக்கு அமைவாக நிதியத்தின் உள்ளகக் கணக்காய்விற்கு உட்பட்டிருக்க வேண்டுமெனினும் மீளாய்வாண்டில் அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு பிரிவொன்று இல்லாமையினால் கணக்காய்வு செய்யப்படவில்லை. | உள்ளக் கணக்காய்வு பிரிவொன்றை அமைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் அல்லது அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும். |